5. கவன ஈர்ப்புகள்.

அ. அரசுப்பள்ளி ஆசிரியர்களது பொது மாற்றம்.

திரு. ஜே. எஸ். இராசு: தலைவர் அவர்களே, 'ஊராட்சி ஒன்றிய பள்ளிகளாக இருந்து தற்போது அரசுப் பள்ளிகளாக மாற்றப்பட்டிருக்கும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு பொது மாற்றம் சில ஆண்டுகளாக நடைபெறாததால் ஆசிரியர் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்த அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, 21—6—1980 அன்று தமிழக சட்டமன்ற உறுப்பினர்களிடம் ஆற்றிய உரையில் மேதகு ஆளுநர் அவர்கள் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்க அரசு முடிவு செய்துள்ளது என்று குறிப்பிட்டு இதுபற்றி அரசு செயல்முறைகளை வகுக்கும் என்று அறிவித்தார்கள். இதையொட்டி ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்குவதற்கு மேற்கொள்ள வேண்டி செய்யவேண்டிய நிர்வாகம் மற்றும் பிற மாற்றங்களைப் பற்றி விளக்கமாக ஆராய்ந்து பரிந்துரைகளை அரசுக்கு வழங்க 5—10—1980 அன்று ஒரு உயர்மட்டக்குழுவை அரசு நியமித்தது. இதனை தொடர்ந்து அரசு 9—3—1981 அன்று அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களும் 1—6—1981 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்படுவர் என்று ஆணை வெளியிட்டது. நிர்வாக வசதியைக் கருதி அரசு மறு உத்தரவு போடும்வரை ஆசிரியர்களை ஊராட்சி ஒன்றியத்திற்குள்ளாகவோ அல்லது ஒரு ஊராட்சி ஒன்றியத்திலிருந்து மற்றொரு ஊராட்சி ஒன்றியத்திலோ மாற்றும் உத்தரவை உடனடியாக நிறுத்தி வைக்கவேண்டுமென்றும், ஏற்கனவே மாற்றல் உத்தரவை வெளியிட்டு இருந்தாலும் அதையும் நிறுத்தி வைக்கவேண்டுமென்றும் சம்பந்தப்பட்ட அனைத்து ஒன்றிய ஆணையருக்கும் அறிவிக்கப்படவேண்டுமென்றும் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு 13—4—1981-ல் உத்தரவு வழங்கப்பட்டது.

[பிற்பகல் 12-30]

1-5-81-க்கு பிறகு ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக மாற்றியதை தொடர்ந்து அவர்களுக்கு ஊதியம் வழங்குதல், பிற்கால சேமிப்பு நிதி கணக்கு மாற்றம் போன்றவற்றில் ஏற்பட்டுள்ள நிர்வாக சிக்கல்கள் முடிந்த உடன் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுக்கு பொது மாறுதல் (General Transfer) வழங்க அரசு தக்க நடவடிக்கை எடுக்கும். இருப்பினும் அவசியமான மாறுதல்கள் ஆணையிடப்பட்டு, தற்பொழுதும், செயல்படுத்தப்படுகின்றது. எதிலும் பதட்ட நிலை நிலவவில்லை. இதுபற்றி ஆசிரியர்கள் ஒருவரும் குறைபாடும் சொல்லவில்லை.

1981 ஆகஸ்ட் 24] [திரு. செ. அரங்கநாயகம்.]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

1-6-81-க்கு முன் ஒவ்வொரு ஆண்டும் ஊராட்சி ஒன்றிய ஆசியர்களுக்கு பொதுமாறுதல்கள் அந்தந்த ஒன்றிய ஆணையர்களால் (General Transfer) வழங்கப்பட்டு வந்துள்ளது. 'பொது மாற்றம்', (General Transfer) சில ஆண்டுகளாக நடைப்பெறாததால் ஆசிரியர்கள் மத்தியில் கவலை ஏற்பட்டுள்ளது என்று உறுப்பினர் குறிப்பிட்டதற்கு ஆதாரம் ஏதும் இல்லை.

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த வரையில், உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் 1976-க்குப் பிறகு, எந்த ஒன்றியத்திலேயும் யூனிவர்சலாக, இந்த பொது மாற்றம் என்றுசொல்லப்படுகிற மாற்றம் நடைபெறவேயில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்வதோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, தேவைப்படுகிற நேரத்தில் அந்தந்த யூனியன்களில் தேவைப்படுகிற விதத்தில் மியூச்சுவல் டிரான்ஸ்பர் என்ற வகையில் நடைபெறுகிறதே தவிர, எல்லா ஒன்றியங்களிலும் மாறுதல்கள் நடைபெறவில்லை. நான் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்ததின் காரணம், ஆசிரியர் சங்கத்திலிருந்து இதற்கான கோரிக்கை அரசுக்கு வந்ததா வரவில்லையா என்பதை எடுத்துக்காட்டுவதற்காக இல்லை.

கோரிக்கை என்று வராவிட்டாலும் கூட 76-க்குப் பிறகு எங்கேயும் பொது மாற்றங்கள் இல்லை என்பதினால், இயல்பான சில குறைபாடுகள் நீங்குவதற்கு வழி இல்லாமல் இருக்கிறது என்கிற குறைபாடு ஆசிரியப் பெரு மக்களிடையே இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் அவர்கள் எதிர்ப்பார்த்து ஏமாறுகிறார்கள். மே மாதத்திலே இந்த ஆண்டு டிரான்ஸ்பர் வேண்டாம் என்று அரசு ஆணை பிறப்பித்தது. பிறகு, ஜூலையில் மாற்றம் செய்யலாம் என்று மறு உத்தரவு போட்டது. அதற்காக ஆசிரியர்களும், கல்வி அதிகாரிகளும் முயற்சி செய்து கொண்டிருக்கிற நேரத்தில், இந்த ஆண்டு மாற்றங்கள் வேண்டாம் என்று இன்னொரு உத்தரவை போட்டு, ஆக மூன்று மாதங்களில் 3 உத்தரவை போடக்கூடிய சூழ்நிலையை அரசு ஏற்படுத்தியிருந்தது. அதைப்பற்றி பரவாயில்லை, போனது போகட்டும் என்றாலும் கூட, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஆசிரியராக இருந்திருக்கிறார். அவர்களுக்கும் ஆசிரியர்களின் சிரமங்களும் எதிர்ப்பார்ப்புக்களும் தெரியும். நானும் ஆசிரியராக இருந்திருக்கிறேன். ஆகவே, நான் அவர்களைக் கேட்டுக் கொள்வது, இந்தக் கல்வி ஆண்டிலாவது ஒரு பொது மாற்றத்தை உருவாக்கித் தந்து அவர்கள் எதிர் பார்த்ததைச் செய்ய, அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என்று அறியவிரும்புகிறேன்.

[1981 ஆகஸ்ட் 24

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்கு பொது மாற்றம் இல்லை என்று நான் சொல்லவில்லை. இப்போது நிர்வாகத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. பஞ்சாயத்துக்களிலிருந்து கல்வித் துறை அதிகாரிகள் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதிலேயே பல பிரச்னைகள் இருக்கின்றன. அவர்களுடைய சம்பள விகிதங்களிலிருந்து சர்வீஸ் ரெஜிஸ்டர்கள் வரை பல வேலைகள் செய்யப்பட வேண்டியிருக்கிறது. ஆசிரியர்களுக்கு ஒன்றியங்களிலிருந்து ஒன்றியங்கள் என்பது மத்திரம் அல்லாமல், மாநில அளவிலே கூட மாற்றங்கள் தரக்கூடிய ஏற்பாடுகளைச் செய்ய யோசித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, ஆசிரியர்களுக்கு எல்லாவிதமான முறையிலும் உதவிகள் செய்யத் தயாராக இருக்கிறோம். ஆனாலும் நிர்வாக முறையில் பல பணிகள் செய்யப்பட வேண்டியிருக்கிறது. அதிலேயே பல பிரச்னைகள் சங்கடங்கள் இருக்கின்றன. அந்தப் பிரச்சினைகளை, நிர்வாக மாற்றம் சம்பந்தப்பட்ட பல பிரச்சினைகளை சரி செய்து விட்ட பிறகு, மாறுதல்களை ஏற்படுத்த யோசிக்கப்படும். நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஹே. எஸ். இராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய தெளிவான விளக்கத்திற்கு நன்றி. அமைச்சர் அவர்கள் எவ்வளவு விரைவாக முடியுமோ, அவ்வளவு விரைவாக மாறுதல்களுக்கான உத்தரவை அனுப்புவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி, நிர்வாக மாறுதலின் காரணமாக, பல பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளெல்லாம் சரிசெய்த பிறகுதான் இந்தப் பிரச்சினையைப் பார்க்க முடியும். ஆசிரியர்களிடமிருந்து அப்படிப்பட்ட கோரிக்கைகள் வந்தால் அதன்மீது பரிசீலனை செய்யலாம். ஆனால், நான் அழுத்தமாகச் சொல்கிறேன். இதுபற்றி ஆசிரியர்களின் சங்கங்களிடமிருந்து எங்களிடத்தில் எந்த ஒரு கோரிக்கையும் இதுவரையில் வரவில்லை.

ஆ. பட்டுக்கோட்டை வட்டங்களில் பாசனத்திற்கு தண்ணீர் தட்டுப்பாடு.

திரு. மு. அம்பிகாபதி: துணைத் தலைவர் அவர்களே, ''தஞ்சை மாவட்டம் கல்லணைக் கால்வாய் மற்றும் சி.எம்.பி. பாசனப் பகுதிகளான மன்னார்குடி, பட்டுக்கோட்டை வட்டங்களில் போதிய தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் அவதிப்படுவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.